# 3 வணிக அமைப்புகள்




இவ் அத்தியாயத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும்

3.1 வணிக அமைப்பு வகைகள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

- வணிக அமைப்புகளை வகைப்படுத்தல்
- வணிக அமைப்பு வகைகளும் அவற்றின் அடிப்படைப் பண்புகளும்

3.2 பொருத்தமான வணிக அமைப்பு முறையொன்றைத் தெரிவுசெய்தல்

- நோக்கத்தின் அடிப்படையில்
- பருமனின் அடிப்படையில்
- முகாமைத்துவ நடைமுறையின் அடிப்படையில்

3.3 தனியாள் உரிமை வணிகமொன்றைப் பதிவு செய்தல்

- பதிவு செய்வதற்குப் பின்பற்றப்படவேண்டிய படிமுறைகள்
- பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள்
- வணிகப் பெயரைப் பதிவு செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்கள்

## 3.1 வணிக அமைப்பு வகைகள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

ஒரு நாட்டின் சனத்தொகை அதிகரிப்பிற்கேற்பப் பொருள்கள், சேவைகளின் உற்பத்தியும் விநியோக நடவடிக்கைகளும் விரிவடைந்துள்ளன. இதனால், மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்குப் பல்வேறு வணிக அமைப்புகள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வாறு தேவை விருப்பங்களைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தனி நபரோ அல்லது தனி நபர் குழுவினரோ ஒன்றிணைதல் வணிக அமைப்பொன்றாக அழைக்கப்படும்.

பல்வேறு தரப்பினர் வணிகத்தில் நிதியிடுவர். இவ்வாறு நிதியிட்டு அதன் நட்ட இடர்களை பொறுப்பேற்கும் தனி நபர்கள் வணிகத்தின் ''**உரிமையாளர்கள்**'' என அழைக்கப்படுவர். உரிமையை அடிப்படையாகக் கொண்டு தனியார், அரச துறைகளில் வணிக அமைப்பு வகைகள் பலவற்றை இனங்காண முடியும்.

அவ்வாறே வணிகர்கள் தமது பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வணிகங்களை நடாத்திச் செல்கின்றனர். இதற்கமைய சில வணிகங்கள் இலாப நோக்காக கொண்டு செயற்படும் அதே வேளை சில வணிகங்கள் சமூக நல நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

வணிகரினால் வணிகத்தில் ஈடுபடுத்தக் கூடிய வளங்களின் அளவிற்கேற்ப சிற்றளவு அல்லது பேரளவு வணிகங்களை ஆரம்பிக்க முடியும். இவ்வாறு வணிக அமைப்பு வகைகளுள் தனக்குப் பொருத்தமான வணிகமொன்றைத் தெரிவு செய்வதற்கு வணிகர்கள் திறமையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

### வணிக அமைப்புக்களை வகைப்படுத்தல்

வணிக அமைப்புக்கள் பல்வேறு விதமாக உருவாக்கப்பட முடியும். இப்பல்வேறு வகைப்பட்ட வணிக அமைப்புக்களை வேறுபட்ட நியதிகளின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.


- உரிமை அடிப்படையில்
- நோக்க அடிப்படையில்
- பருமன் / அளவு அடிப்படையில்

## உரிமையை அடிப்படையாகக் கொண்டு வணிக அமைப்புக்களை வகைப்படுத்தல்

வணிகத்துக்குத் தேவையான நிதியினை ஈடுபடுத்தி அதன் இடர்களைப் பொறுப் பேற்கும் நபர்கள் "**உரிமையாளர்கள்**" என அழைக்கப்படுவர். வணிகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இலாபத்தையும் அதேவேளை நட்டத்தையும் ஏற்றுக் கொள்பவர் உரிமையாளரேயாவர். எனவே உடைமை அடிப்படையில் வணிக அமைப்புகளைப் பிரதானமாக இரண்டாக வகைப்படுத்தலாம்.

- தனியார் துறை வணிகம்
- பொதுத்துறை / அரசதுறை வணிகம்

உடைமை அடிப்படையில் வணிக அமைப்பை வகைப்படுத்தியுள்ள முறை கீழே காட்டப்பட்டுள்ளது.




உரிமையை அடிப்படையாகக் கொண்டு வணிக அமைப்புகளை வகைப்படுத்தல்

## தனியார் துறை வணிக அமைப்புகள்

வணிகத்தின் உரிமையானது தனி ஒரு நபருக்கோ அல்லது ஒரு தொகுதி நபர்களிற்கோ உரித்துடைய வணிகம் ''**தனியார் துறை வணிகம்**'' என அழைக்கப்படும். தனியார் துறையினை தனியாள் உரிமை வணிகம் (தனிநபர் வணிகம்), பங்குடைமை வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, கூட்டுறவுச் சங்க வணிகம், சங்க வகைகள் என்றவாறு மேலும் வகைப்படுத்த முடியும்.

## பொதுத் துறை வணிக அமைப்புகள்


அரசினால் மூலதனமிட்டு அரசுக்கு உடைமையாகவுள்ள வணிக அமைப்பு ''**பொதுத் துறை வணிக**'' அமைப்பாகும். இதன் கீழ் அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அரச கம்பனிகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத்தின் கீழ் இயங்கும் வணிகங்கள் என்பன பொதுத் துறையில் காணப்படுகின்றன.

## நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வணிக அமைப்புகளை வகைப்படுத்தல்

பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பல்வேறு அமைப்புகள் இயங்கி வருகின்றன. வணிகர்களும் இவ்வாறு குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காக வணிகத்தை நடாத்துகின்றார்கள். வணிகங்களை நோக்கத்தின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- இலாப நோக்குள்ள வணிக அமைப்புகள்
- இலாப நோக்கற்ற வணிக அமைப்புகள்

கீழ் காணப்படும் பாய்ச்சற் கோட்டுப் படம் மூலம் மேலும் விரிவாக நோக்கலாம்.




நோக்க அடிப்படையில் வணிக அமைப்புகளை வகைப்படுத்தல்

## இலாப நோக்குள்ள வணிக அமைப்புகள்

இலாபம் பெறுவதை பிரதான நோக்கமாகக் கொண்ட வணிக அமைப்பு **''இலாப நோக்குள்ள வணிக அமைப்புகள்''** என அழைக்கப்படும். இவ்வகையான வணிக அமைப்பு வகைகள் தனியார் துறை மற்றும் அரச துறை அமைப்புக்களில் செயற்படுத்தப் படுகின்றன.

## இலாப நோக்கற்ற வணிக அமைப்புகள்

இவ்வகையான வணிக அமைப்புகளின் பிரதானமான நோக்கம் அங்கத்தவர்களினதும் சமூகத்தினதும் நலன்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதாகும். இலாப நோக்கற்ற வணிகங்கள் தனியார் துறை அமைப்பைப் போன்று அரச துறை அமைப்பிலும் செயற்படுத்தப்படுகின்றன.


## பருமன் / அளவு அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்தல்

வணிக அமைப்புகளின் பருமனானது பல்வேறு நியதிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வாறு இனங்காணப்பட்ட அளவு ரீதியான நியதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- வணிகத்தின் மூலதனத்தின் அளவு
- ஊழியர்களின் எண்ணிக்கை
- பயன்படுத்தும் வலுவின் (சக்தியின்) அளவு
- வணிகத்திற்காகக் காணப்படும் சந்தையின் அளவு (சந்தைப் பங்கு)

வணிக அமைப்புகளை பருமன் அடிப்படையில் பிரதானமாக இரண்டாக வகுத்து நோக்கலாம்.

- சிற்றளவு, நடுத்தர அளவிலான வணிகங்கள்
- பேரளவு வணிகங்கள் / பாரிய அளவிலான வணிகங்கள்




பருமன் / அளவு அடிப்படையில் வணிக அமைப்பை வகைப்படுத்தல்

## சிற்றளவும் நடுத்தர அளவிலானதுமான வணிக அமைப்புக்கள்



படம் 3.1

பல்வேறு நிறுவனங்கள் சிறிய, நடுத்தர அளவு வணிக வகைப்படுத் தலுக்காக பல்வேறு நியதிகளை முன் வைத்துள்ளன. அதன் அடிப்படையில் பாரிய அளவு வணிகத்துடன் ஒப்பீட்டளவில் நோக்கும்போது சிறிய அளவு முதலீட்டைக் கொண்ட தும் குறைந்தளவு ஊழியரும் சந்தைப் பங்கு சிறியதுமான வணிகங்களை, **''சிறிய நடுத்தர அளவிலான வணிகங்கள்''** என அழைக்க முடியும்.

உதாரணம் **:**

சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களமானது ஊழியர் தொகை 25 இற்கும் குறைந்த வணிகத்தை சிறிய, நடுத்தர வணிகங்கள் என அறிமுகப்படுத்தியுள்ளது.

## பாரியளவிலான வணிக அமைப்புக்கள்



படம் 3.2

அதிக மூலதனத்தை ஈடுபடுத்தியுள்ள, அதிக ஊழியர் பணிபுரிகின்ற, பரந்த சந்தை வாய்ப்பைப் பெற்றுள்ள, குறித்த கைத்தொழிலில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய வணிகங்களை **பாரியளவிலான வணிகங்கள்** என அழைக்க முடியும்.

உதாரணம் :

அதிக ஊழியர்களைக் கொண்ட கைத்தொழிற்சாலை

தொடர்ந்து கீழே காட்டப்படும் வணிக அமைப்பு வகைகள் பற்றி விரிவாக நோக்குவோம்.

## தனியாள் உரிமை




படம் 3.3

தனிநபர் ஒருவருக்கு உரித்தாகக் காணப்படும் வணிகம் தனியாள் உரிமை வணிகம் என அழைக்கப் படும். இவ்வணிக அமைப்பே உலகத்தின் எல்லா நாடுகளிலும் பரவலாகக் காணப்படுகின்றது.

இலகுவாக ஆரம்பிக்கக் கூடியதாக இருத்தல், சிறிய முதலீடு போது மானதாயிருத்தல், சுயமாகத் தீர்மான மெடுக்கக்கூடியதாக இருத்தல் போன்ற காரணங்களினால் இவ்வணிகம் பரவ லாகக் காணப்படுகின்றது. உரிமை யாளரின் திறமை மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றின் அடிப்படையில் இவ் வணிக அமைப்பின் வெற்றி தங்கியுள்ளது.

### தனியாள் உரிமை வணிகத்தின் பண்புகள்

தனியாள் உரிமை வணிகத்தில் பின்வரும் பண்புகளைக் காண முடியும்

- **மூலதனமானது உரிமையாளராகிய தனிநபரால் ஈடுபடுத்தப்படல்.**

  வணிகத்திற்குத் தேவையான மூலதனத்தை உரிமையாளரே தனியாக ஈடுபடுத்த வேண்டும். உரிமையாளர் தனது சேமிப்பிலிருந்து அல்லது கடன்கள் மூலமாக மூலதனத்தை ஈடுபடுத்தலாம்.

- **இலாபம் அல்லது நட்டத்தை உரிமையாளரே அனுபவித்தல்**

  தனியாள் உரிமை வணிகத்தில் உழைக்கும் அனைத்து இலாபமும் உரிமையாளரையே சாரும். அவ்வாறே நட்டம் ஏற்படுமாயின் உரிமையாளரே தனியாகப் பொறுப்பேற்க வேண்டும்.

- **உரிமையாளரின் வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்பு**

  தனியாள் உரிமை வணிகத்தில் உரிமையாளரின் நட்டப் பொறுப்பு வரை யறையற்றதாகும். இதனடிப்படையில் உரிமையாளரின் பொறுப்புக்கள் தாம் இட்ட மூலதனத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாதிருக்கும். தனது ஏனைய சொந்தச் சொத்துக்களையும் வணிகத்தின் பொறுப்புகளைத் தீர்ப்பதற்காக இழக்கவேண்டி ஏற்படுவதோடு அவ்வாறு இழக்கவேண்டிய அளவு வரையறையற்றதாகவும் இருக்கும்.

- **சட்ட ஆளுமை இன்மை**

    தனியாள் உரிமை வணிகத்தில், அவ்வணிகத்தின் பெயரில் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாது. உரிமையாளரின் சொந்தப் பெயரின் மீதே சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும். உதாரணமாக ஒப்பந்தங்கள் செய்தல், சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், வங்கிக் கடன் பெறுதல், வழக்குத் தொடருதல் போன்றவற்றை உரிமையாளர் தனது சொந்தப் பெயரிலேயே மேற்கொள்ள வேண்டும்.

- **தொடர்ந்து இயங்கும் தன்மையற்றது**

    தனிவணிக உரிமையாளர் மரணமடைதல், சித்த சுவாதீனமற்ற நிலையிலிருத்தல் போன்ற காரணங்களால் அவரது வணிகத்தைத் தொடர்ந்து நடாத்த முடியாது போகலாம்.

- **பதிவுசெய்தல் கட்டாயமன்று**

    பொதுவாகத் தனிநபர் வணிகம் பதிவுசெய்தல் கட்டாயமற்றதாகும். ஆனாலும் வணிக உரிமையாளர் தனது முழுப் பெயரிலன்றி வேறு பெயரில் வணிகத்தை நடாத்தினால் உரிய மாகாண சபையின் வணிகப் பெயர் கட்டளைச் சட்டத்தின் கீழ் வணிகப் பெயர் பதிவாளர் அலுவலகத்தில் வணிகத்தின் பெயரைப் பதிவுசெய்தல் வேண்டும்.

மேற்காட்டப்பட்ட பண்புகளை விட சுயமாகத் தீர்மானம் எடுத்தல், நிர்வாகத்தை உரிமையாளரே மேற்கொள்ளல், தனது விருப்பத்திற்கேற்ப எந்த நேரத்திலும் வணிகத்தை முடிவுக்குக் கொண்டு வருதல் போன்ற பண்புகளையும் தனிநபர் வணிகத்தில் காண முடியும்.

### தனியாள் உரிமை வணிக அமைப்பின் அனுகூலங்கள்

ஏனைய வணிக அமைப்பு வகைகளோடு ஒப்பிடுகையில் தனியாள் உரிமை அமைப்பு முறையில் பின்வரும் அனுகூலங்கள் காணப்படும்.

- **இலகுவாக ஆரம்பிக்கக் கூடியதாயிருத்தல்**

    ஏனைய வணிக அமைப்புகளுடன் ஒப்பிடும்போது இவ்வணிக அமைப்பைக் கட்டுப்படுத்தும் சட்டதிட்டங்கள் குறைவாக இருத்தல், ஆரம்பிக்கும் செலவு குறைவாக இருத்தல் போன்ற காரணங்களினால் தனியாள் உரிமை வணிகங்களை இலகுவாக ஆரம்பிக்க முடியும்.

- **அனைத்து இலாபங்களும் உரிமையாளருக்குரியதாகுதல்**

    தனியாள் உரிமை வணிக அமைப்பில் உழைக்கும் சகல இலாபங்களையும் உரிமையாளரே அனுபவிக்க முடியும்.

- **வணிக அமைப்பினது தகவல்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படல்**

  வணிகத்தின் சகல முகாமைத்துவ நிர்வாகச் செயற்பாடுகளும் பெரும்பாலும் உரிமையாளரால் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், வணிகத் தகவல்கள் வெளியாருக்குப் பரிமாற்றப்படுவது குறைவாகவே காணப்படும். இதன் காரணமாக வணிக இரகசியம் பாதுகாக்கப்படும்.

- **தமது திறமையை உச்சமாக பயன்படுத்தக் கூடியதாகவிருத்தல்**

  சகல பிரதிபலன்களும் உரிமையாளருக்கே உரித்தாவதால் தனது ஆற்றல் களையும் அர்ப்பணிப்புகளையும் உச்சமாகப் பயன்படுத்தி வணிகத்தை முன் னேற்றுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

- **சுதந்திரமான தீர்மானமெடுத்தல்**

  வணிகம் தொடர்பாக சகல தீர்மானங்களும் உரிமையாளராலேயே மேற் கொள்ளப்படுவதால் விரைவாகத் தீர்மானங்களை எடுக்க முடியும்.

### தனியாள் உரிமை வணிக அமைப்பின் பிரதிகூலங்கள்

ஏனைய வணிக அமைப்புக்களுடன் ஒப்பிடுகையில் தனியாள் உரிமை வணிகத்தினது பிரதான பிரதிகூலங்களைப் பின்வருமாறு காட்ட முடியும்.

- **உரிமையாளரின் வரையறுக்கப்படாத பொறுப்பு**

  வணிகம் பெற்றுக்கொள்ளும் சகல கடனுக்கும் உரிமையாளர் தனிப்பட்ட முறையில் பொறுப்புக் கூற வேண்டி ஏற்படும். வணிகத்தில் காணப்படும் சொத்துக்களின் பெறுமதிக்கு மேலாக கடன் தொகை அதிகமாகக் காணப்பட்டால் தனது சொந்தச் சொத்துகளை விற்றுக் கடன்களை மீளச் செலுத்தவேண்டிய பொறுப்பு உரிமையாளருக்குரியதாகும்.

- **மூலதனத்தைத் திரட்டுவதில் சிரமம் காணப்படல்**

  தனிநபர் ஒருவரிடம் காணப்படும் நிதி வளம் வரையறைக்குட்பட்டதாகும். அவ்வாறே தனியாள் உரிமை வணிகத்தில் காணப்படும் உச்ச இடர், உரிமையாளரின் வரையறையற்ற நட்டப் பொறுப்புக்கள் போன்ற காரணங் களினால் வங்கி போன்ற பிற மூலங்களிலிருந்து மூலதனம் திரட்டுவதும் சிரமமானதாகும்.

- **தொடர்ந்து இயங்கும் தன்மை காணப்படாமை**

  உரிமையாளர் மரணமடைதல், சித்த சுவாதீனமற்றிருத்தல் போன்ற காரணங் களினால் வணிகச் செயற்பாடுகள் முடிவுக்கு வரலாம்.

- **சட்ட ஆளுமையின்மை**

  தனியாள் உரிமை வணிகத்துக்கு சட்டரீதியான அந்தஸ்து இல்லை. இதனால் சட்ட ரீதியான சகல செயற்பாடுகளையும் உரிமையாளர் தனது பெயரிலேயே கையாள வேண்டி ஏற்படும்.

- **உரிமையாளரது தனிநபர் தீர்மானம் வெற்றிகரமற்றதாக அமைய முடிதல்**

  கலந்தாலோசித்து எடுக்கும் தீர்மானத்துடன் ஒப்பிடும்போது தனிநபராக தனது அறிவு மற்றும் அனுபவங்களுடன் மேற்கொள்ளும் தீர்மானங்கள் சில சந்தர்ப்பங்களில் வெற்றிகரமற்றதாக அமையலாம்.

## பங்குடைமை வணிகம்

இலாபம் உழைப்பதை நோக்கமாகக் கொண்டு பொதுவில் வணிகமொன்றை நடாத்தும் நபர்களுக்கிடையிலான உறவு முறை பங்குடைமை வணிகம் என அழைக்கப்படும். 1890 ஆம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச்சட்டம் பங்குடைமை வணிகத்தில் தாக்கஞ் செலுத்துகின்றது.

கணக்கியலாளர்கள், சட்டத்தரணிகள், வரி அறவிடும் அதிகாரிகள், வைத்தியர்கள், தரகர்கள் போன்ற வாண்மைத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் பங்குடைமைத் தொழிலில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது.

உதாரணம் :

பட்டயக் கணக்காளர் சிலர் கணக்காய்வு நிறுவனமொன்றை நடாத்திச் செல்லல்.




படம். 3.4

**பங்குடமை வணிகத்தின் பண்புகள்**

ஏனைய வணிக அமைப்புக்களுக்கு இருப்பதுபோல் பங்குடைமை வணிகங்களிலும் காணக்கூடிய பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- **அங்கத்தவர் எண்ணிக்கை**

  பங்குடைமை வணிகம் ஆரம்பிப்பதற்குக் குறைந்தபட்ச அங்கத்தவர் (பங்காளர்) இரண்டு பேர் இருக்கவேண்டியதுடன் உச்சமாக 20 அங்கத்த வர்கள் (பங்காளர்கள்) காணப்பட முடியும். பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் என 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கக் கம்பனிச் சட்டம் குறிப்பிடுகின்றது.

- **பங்குடைமை ஒப்பந்தம்**

  பங்குடைமை வணிகம் உருவாகுவது பங்காளர்களுக்கிடையில் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையிலாகும். அவ் இணக்கப்பாடானது **பங்குடமை ஒப்பந்தம்** எனஅழைக்கப்படும். வாய்மொழி மூலம் அல்லது எழுத்து மூலம் அல்லது நடத்தை மூலம் பங்குடமை ஒப்பந்தம் ஏற்பட முடியும். மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டத்தின்படி பங்குடைமை வணிகத்தின் ஆரம்ப மூலதனம் ரூ. 1 000 அல்லது அதற்கு மேற்படக் காணப்படின் பங்குடைமையானது எழுத்து மூல ஒப்பந்தத்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்த எழுத்துமூல ஒப்பந்தம் **பங்குடைமை உறுதி** (Partnership deed) என அழைக்கப்படும்

- **பங்காளரின் வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்பு**

  பங்குடைமை வணிகத்தின் கடன் தீர்த்தல் தொடர்பாக வரையறையற்ற நட்டப் பொறுப்பு காணப்படும். வணிகத்தின் கடனை அடைப்பதற்கு அதனது சொத்துக்கள் போதாவிடின் பங்காளர்கள் தமது சொந்தச் சொத்துகளையும் பயன்படுத்திக் கடனைச் செலுத்த வேண்டிய நிலையேற்படும்.

- **பங்குடைமை வணிகத்தைப் பதிவு செய்தல் கட்டாயமற்றது.**

  பங்குடைமையின் பங்காளர்கள் அனைவரது பெயர்களையும் உள்ளடக்கியவாறு வணிகத்தை நடத்தினால் அப்பங்குடைமையைப் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமல்ல. ஆனால், வேறு பெயரில் வணிகம் நடத்தப்பட்டால் 1918 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க வணிகப் பெயர் கட்டளைச் சட்டத்திற்கமைய குறித்த மாகாண சபையின் வணிகப் பெயர்கள் சட்டத்தின் கீழ் வணிகப் பெயர் பதிவாளர் காரியாலயத்தில் வணிகப் பெயரினைப் பதிவு செய்தல் வேண்டும்.

- **சட்ட ஆளுமை இன்மை**

  பங்குடைமை வணிகமானது சட்டத்தின் முன்னால் தனிமனிதனாக கருதப்படமாட்டாது. இதனால் பங்குடைமை வணிகத்தின் பெயரால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. பங்காளர்களின் தனிப்பட்ட பெயர்களிலேயே சட்ட நடவடிக்கைகளிற்கு முகங்கொடுக்க நேரிடும்.

  உதாரணம் :- ஒப்பந்தங்கள் மேற்கொள்ளல், வாகனங்கள் கொள்வனவு, வங்கிக் கடன்பெறல்,வழக்குத் தொடருதல்.

- **தொடர்ந்து இயங்கும் தன்மை இல்லாமை**

  பங்காளர்களில் ஒருவர் மரணமடைதல், சித்த சுவாதீனமற்றிருத்தல் போன்ற காரணங்களால் அவர்களால் நடாத்திச் செல்லும் பங்குடமை வணிகத்தின் நீடித்த வாழ்விற்குத் தடைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

### பங்குடைமை வணிக அமைப்பின் அனுகூலங்கள்

ஏனைய வணிக அமைப்புக்களுடன் ஒப்பிடுகையில் பங்குடைமை வணிக அமைப்பில் பின்வரும் அனுகூலங்களைக் குறிப்பிடலாம்.

- **இலகுவில் ஆரம்பிக்க முடிதல்**

  தனியாள் உரிமை வணிகத்தைப்போல பங்குடைமை வணிகத்தையும் ஆரம்பிப்பது இலகுவானதாகும். பங்குடைமை வணிக அமைப்பை ஆரம்பிக்கும்போதும் நடாத்திச் செல்லும்போதும் அதனைக் கட்டுப்படுத்தும் சட்டத்திட்டங்கள் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன.

- **அதிக மூலதனத்தைத் திரட்ட முடிதல்**

  இருவர் அல்லது இரண்டிற்கு மேற்பட்டோர் பங்குடைமை வணிக அமைப்பில் இணைந்துகொள்ள முடிவதால் அதிக மூலதனத்தைத் திரட்டிக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

- **பங்காளர்களிடம் காணப்படும் பல்வேறு திறன்களைப் பயன்படுத்திக்கொள்ள முடிதல்**

  பங்குடைமை வணிகத்தில் முகாமைத்துவச் செயற்பாடுகளில் பங்காளர்கள் பங்குபற்றுவதால் அவர்களிடம் காணப்படுகின்ற விசேட ஆற்றல்களை வணிகத்தின் வெற்றிக்குப் பயன்படுத்த முடியும். அநேகமான வாண்மைத் தொழில்கள் பங்குடைமை வணிகமாகக் காணப்படுவதற்கு இதுவே பிரதான காரணமாக அமைகின்றது.

- **பொறுப்புகளை பங்காளர்களிடம் பகிர்ந்துகொள்ள முடிதல்**

  பங்குடமை வணிகமொன்றில் வணிக நடவடிக்கைகளினால் மேலெழும் பொறுப்புக்கள் பங்காளர்களிடையே பகிரப்படும்.

- **கூட்டாகத் தீர்மானங்களை மேற்கொள்ள முடிதல்**

  பங்குடைமை வணிக அமைப்பில் பங்காளர்கள் பலர் இருப்பதால் கூட்டாகச் சேர்ந்து மிகச் சரியான தீர்மானங்களை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

## பங்குடைமை வணிக அமைப்பின் பிரதிகூலங்கள்

- **வரையறையற்ற நட்டப் பொறுப்பு**

  பங்குடைமை வணிகத்தில் பங்காளர்களின் கடன்கள் தொடர்பாக வரைறையற்ற நட்டப்பொறுப்பு காணப்படுகின்றது. இதனால் தாம் ஈடுபடுத்திய மூலதனத்தைவிடக் கடன் பொறுப்பு அதிகமாக இருக்குமாயின் அக்கடனைச் செலுத்தப் பங்காளர்கள் தமது சொந்தச் சொத்துக்களையும் இழக்க வேண்டி ஏற்படும்.

- **இலாபம் பல நபர்களுக்கிடையில் பகிரப்படுதல்**

  தனியாள் உரிமை வணிகத்தில் உழைக்கும் இலாபம் முழுவதும் தனி உரிமையாளரைச் சென்றடைந்தபோதும், பங்குடைமை வணிகத்தில் பங்கா ளர்கள் பலர் காணப்படுவதால் இலாபம் பலபேர்களிடையே பகிர்ந்தளிக்கப் படும்.

- **பங்காளர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட முடிதல்**

  வணிகத்தை நடத்திச் செல்கையில் பங்காளர்களால் எடுக்கப்படும் வெவ் வேறான தீர்மானங்களால் பல்வேறு முரண்பாடுகள் அவர்களிடையே தோன்றக் கூடும். அவ்வாறன முரண்பாடுகள் வணிகத்தைத் தோல்வியடையச் செய்யும்.

- **தொடர்ந்து இயங்கும் தன்மை இன்மை**

  பங்காளர்களில் ஒருவர் மரணமடைதல், சித்த சுவாதீனமற்றவராதல் போன்ற காரணங்களால் அவர்கள் நடாத்திச் செல்லும் பங்குடைமைக்குத் தடைகள் ஏற்படுவதுடன் பங்குடைமை வணிகத்தைக் கலைக்க வேண்டி ஏற்படலாம்.

- **சட்ட ஆளுமை இன்மை**

  பங்குடைமை வணிகம் சட்டத்தின் முன் தனிநபராக ஏற்றுக் கொள்ளப் படாமையால் சட்ட நடவடிக்கையின்போது பங்காளர் தமது சொந்தப் பெயரிலேயே அவற்றிற்கு முகங்கொடுக்க நேரிடும்.

## கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

2007 / 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ததும் சட்ட ரீதியாகத் தனி மனித அந்தஸ்து உடையதும் பங்குகளை வெளியிட்டு மூலதனத்தைத் திரட்டக்கூடியதும் பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதுமான வணிக அமைப்புகள் ''**கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்**'' என அழைக்கப்படும். இந்தக் கம்பனியின் உரிமையாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்த பங்குதாரர் ஆவார். அவர்கள் கொள்வனவு செய்த பங்குக்காக செலுத்திய அல்லது செலுத்துவதற்கு உடன்பட்ட பெறுமதிக்கு மட்டுமே அவர்களது நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்.

### கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பொதுப் பண்புகள்

கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிகளில் காணப்படும் பிரதான பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளது.

- **கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்**

  கூட்டிணைக்கப்பட்ட கம்பனியை ஆரம்பிப்பதற்கு 2007/7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். இங்கு சட்டத்தில் குறிபிடப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அமைய உரிய ஆவணங்களைப் பூரணப்படுத்திக் கம்பனிப் பதிவாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

- **தொடர்ந்து இயங்கும் தன்மை இருத்தல்**

  கம்பனி அதன் உரிமையாளர்களிடமிருந்து வேறுபட்டுத் தனியொரு அலகாகக் கருதப்படுவதால் கம்பனியின் பங்குதாரர்கள் மரணமடைதல் போன்ற காரணங்களால் கம்பனியின் வணிகச் செயற்பாட்டுக்குத் தடைகள் ஏற்படுவதில்லை.

- **வரையறுக்கப்பட்ட நட்டப்பொறுப்புக் காணப்படல்**

  கம்பனியின் கடன் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாகப் பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. அதாவது, அவர்களின் நட்டப் பொறுப்பு கொள்வனவு செய்த பங்கின் பெறுமதிக்கு வரையறுக்கப்பட்டதாக இருக்கும். தனியாள் உரிமை வணிகம், பங்குடைமை வணிகம் என்பன போன்று தமது சொந்த சொத்துக்களை இழக்க வேண்டிய நிலைமை பங்குதாரருக்கு ஏற்படுவதில்லை.

- **பங்குகளை வெளியிடுவதன் மூலம் மூலதனத்தைத் திரட்டுதல்**

  கூட்டிணைக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் பங்குகளை வழங்குவதனூடாகத் தமது மூலதனத்தைத் திரட்டிக்கொள்ள முடியும்.

## கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் அனுகூலங்கள்

ஏனைய வணிக அமைப்புகளுடன் ஒப்பிடுகையில் கம்பனி அமைப்புகளில் காணப்படும் பிரதானமான அனுகூலங்கள் பின்வருமாறு

- **அதிக மூலதனத்தைத் திரட்ட முடிதல்**

  பங்குகளை வழங்குவதன் மூலம் மூலதனத்தைத் திரட்டுவதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதால் அதிகளவு மூலதனத்தைத் திரட்டக்கூடிய வாய்ப்புக் கிடைகின்றது. உயர்ந்த அங்கீகாரம் இருப்பதனால் வெளியாரிடமிருந்து கடன் மூலமும் நிதியினைத் திரட்டிக் கொள்வது இலகுவாக அமையும்.

- **சட்ட ஆளுமை காணப்படுதல்**

  கம்பனி சட்டத்தின் முன்னால் தனிமனித அந்தஸ்து உடையதாக இருக்கும். இதனால் ஒப்பந்தங்களை மேற்கொள்கின்றபோதும் பிரதிநிதிகளை நியமிக்கும் போதும் சொத்துக்களை உரிமையாக்கிக் கொள்ளும் போதும், வரி கொடுக்கும்போதும் கம்பனி தனது பெயரில் செயற்பட முடியும்.

- **தொடர்ந்து இயங்கும் தன்மை இருத்தல்**

  கம்பனியின் பங்குதாரர் மரணமடைதல், முறிவடைதல் போன்ற காரணங்களால் கம்பனியின் வணிகச் செயற்பாட்டுக்குத் தடை ஏற்படமாட்டாது. இதனால் தொடர்ந்து வணிக நடவடிக்கைகளில் நீண்ட காலம் இயங்கச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

- **நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டது.**

  கம்பனியின் பங்குதாரரின் நட்டப்பொறுப்புகளானது அவர்கள் செலுத்திய மூலதனத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக இருக்கும்.

- **பணிப்பாளர் சபையின் மூலம் வணிக செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்**

  கம்பனி பங்குதாரர்களினால் வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபையின் மூலம் சகல செயற்பாடுகளும் முகாமைத்துவம் செய்யப்படும்.

## கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பிரதிகூலங்கள்

ஏனைய வணிக அமைப்புக்களைப் போலவே கம்பனி அமைப்பிலும் காணக்கூடிய பிரதிகூலங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

* **சட்டரீதியான செல்வாக்கு அதிகமாகக் காணப்படல்**

  கம்பனியை ஆரம்பித்தல், நடாத்திச் செல்லல், கலைத்தல் போன்றவற்றின் போது செல்வாக்குச் செலுத்தும் சட்டத்திட்டங்களும் விதி முறைகளும் ஏனைய வணிக அமைப்புக்களைவிட மிக அதிகமாகக் காணப்படுவதால் கம்பனியை நடாத்திச் செல்வது சிரமமானதாகக் காணப்படும்

* **இலாபமும் உரிமையும் பகிரப்படல்**

  கம்பனியில் அதிகளவான பங்குதாரர்கள் இருப்பதால் உரிமையும் இலாபமும் அதிகமானவர்களிடையே பகிரப்படவேண்டியேற்படும்.

## கூட்டுறவுச் சங்கம்

ஜனநாயக ரீதியிலான நிருவாகத்தையும் சுயாதீன செயற்பாடுகளையும் கொண்டதாகத் தனிநபர்கள் சுயவிருப்பின்பேரில் ஒன்றிணைந்து சம உரிமையை அனுபவிக்கும் குழுவாகப் பொதுத் தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு உருவாக்கப்படும் அமைப்பே **கூட்டுறவுச் சங்கம்** ஆகும். ஆகக் குறைந்தது 10 அங்கத்தவர்கள் காணப்படுவர். மூலதனம் அங்கத்தவர்களிடமிருந்து அங்கத்துவப் பணம் மூலம் திரட்டப்படும். 1972 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் இவை பதிவு செய்யப்படும்.

உதாரணம் :

கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
இலங்கை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
சனச (Sanasa) கூட்டுறவு அமைப்பு

## கூட்டுறவு அமைப்பின் பண்புகள்

கூட்டுறவு அமைப்பில் காணக்கூடிய விசேட பண்புகள் சில கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.

* **ஜனநாயக நிருவாகம் நடைபெறுகின்றமை.**

  சகல அங்கத்தவர்களும் வாக்களிப்பதன் மூலம் கூட்டுறவுச்சங்கத்தின் நிருவாகத்துக்கான பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்படும் பெரும் பான்மையினரின் விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானங்கள் மேற் கொள்ளப்படுதல் ஜனநாயக நிர்வாக முறையினைப் பிரதிபலிக்கின்றது.

* **சுயமான திறந்த அங்கத்துவம்**

  எவரும் தமது சுய விருப்பின் பேரில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் அங்கத்துவத்திலிருந்து விலகிக் கொள்வதற்குமான இயலுமை காணப்படுகின்றது.

- **அங்கத்தவர்களுக்குச் சமமான உரிமை**

  கூட்டுறவுச் சங்கங்களின் உரிமை அங்கத்தவர்களுக்கே உரியதோடு அங்குள்ள சகல சொத்துக்களும் அங்கத்தவர்கள் அனைவருக்கும் உரிமையானதாகும்.

- **பொதுத் தேவைப்பாடுகளையும் நோக்கங்களையும் கொண்டதாக இருத்தல்**

  கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான நோக்கமானது தமது அங்கத்தவர்களின் நலனைப் பாதுகாப்பதுடன் சமூகத்தின் விருத்தி கருதிச் செயற்படுவதாகும்.

## கூட்டுறவுச் சங்கத்தின் அனுகூலங்கள்

ஏனைய வணிக அமைப்புக்களைப் போலவே கூட்டுறவு அமைப்பிலும் அனுகூலங்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு.

- **ஜனநாயக நிருவாகம் பேணப்படல்**

  அங்கத்தவர் பெரும்பான்மையினரின் விருப்பத்தின் பேரில் பணிப்பாளர் சபையைத் தெரிவு செய்வதற்கும் தீர்மானம் எடுப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

- **அங்கத்தவர்களின் நலன்கருதி செயற்படுகின்றமை**

  கூட்டுறவு அமைப்பு பொது நோக்கம் கருதி உருவாக்கப்படுவதால் எப்போதும் அங்கத்தவருக்கு வகைகூறுதலைப் போன்று எல்லோரையும் சமமாக மதித்தல் எனும் கொள்கையையும் பின்பற்றிச் செயற்படுகின்றது.

- **மிகை அங்கத்தவரிடையே பகிரப்படுதல்**

  கூட்டுறவுச் சங்கம் வணிகச் செயற்பாடுகள் மூலம் உழைத்துக் கொள்ளும் மிகையானது பல்வேறு வகைகளில் அங்கத்தவர்களிடையே பகிர்ந்து கொள்ளப்படும்.

## கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிகூலங்கள்

- **மூலதனம் வரையறுக்கப்பட்டதாக இருத்தல்**

  அங்கத்தவர்களின் அங்கத்துவக் கட்டணங்கள் மூலமாக மட்டுமே மூலதனம் திரட்டிக் கொள்ளப்படும். இதனால் திரட்டக் கூடிய மூலதன அளவு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

- **கூட்டுறவுக் கொள்கைக்கேற்ப செயற்படவேண்டியிருத்தல்**

  கூட்டுறவு அமைப்பு கூட்டுறவின் கொள்கைகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்படுகின்றது. அக்கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டியிருப்பதால் தற்காலப் போட்டி நிறைந்த வணிக நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்குத் தேவையானவாறு தனது வணிக நடவடிக்கைகளை மாற்ற முடியாது உள்ளமை.

## சங்க அமைப்புக்கள்

சமூக நலன்களை நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற ஒரு அமைப்பே ''**சங்க அமைப்புக்கள்**'' என அழைக்கப்படும். விசேடமாக அங்கத்தவர்களின் நலன்கள், சமூக சேவைகள், தர்ம காரியங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

உதாரணம்

விளையாட்டுக் கழகம்
விவசாயக் கழகம்
நலன்புரிச் சங்கங்கள்

## அரச கூட்டுத்தாபனங்கள்

முழுமையான உரிமை அரசாங்கத்துக்கோ அல்லது உரிமையில் பெரும்பான்மை அரசாங்கத்திற்கு உரியதாகக் காணப்படும் அமைப்பு ''**அரச கூட்டுத்தாபனம்**'' என அழைக்கப்படும்.அரசால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் மூலம் அரச கூட்டுத்தாபனம் நிருவகிக்கப்படுகின்றது.

இவ்வமைப்புக்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பொதுவான சட்டம் அல்லது விசேட சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. இவற்றை அரச கூட்டுத்தாபனம், அதிகார சபை, ஆணைக்குழு , சபைகள், பணியகம் போன்ற பெயர்களில் அழைக்கலாம்.

உதாரணம் :

இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம்
தெங்கு அபிவிருத்திச் சபை
வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
இலங்கைத் துறைமுக அதிகார சபை
அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
விவசாயக் காப்புறுதிச் சபை

### அரச கூட்டுத்தாபனங்களின் விசேட பண்புகள்

அரச கூட்டுத்தாபனங்களில் காணப்படும் பண்புகள் பின்வருமாறு:

- **உரிமையும் நிருவாகமும் அரசாங்கத்திற்குரியதாக இருத்தல்**

  வணிகத்தினது உரிமையும் நிருவாகமும் முழுமையாக அல்லது பெரும் பான்மையாக அரசிற்கே உரித்தாகவுள்ளன. சில சந்தர்ப்பங்களில் சிறிய அளவில் மட்டுமே இவை தனியாருக்கு உரிமையாகக் காணப்படுகின்றன.

- **தனிமனித அந்தஸ்து இருத்தல்**

  அரச கூட்டுத்தாபனமானது சட்டரீதியான விடயங்களில் தனிமனித அந்தஸ்து உடையதாகவிருக்கும்.

- **விசேட சட்டமொன்றினூடாக அல்லது தற்போது நடைமுறையிலுள்ள பொதுச் சட்டத்தினூடாக உருவாக்க முடியும்.**

- **தொடர்ந்தியங்கும் தன்மை இருத்தல்**

  பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டத்தின் கீழ் அல்லது பொதுவான சட்டத்தின் கீழ் அரச கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்படுவதால் இவை தொடர்ந்து இயங்கும் தன்மை கொண்டவையாகும்.

### அரச கூட்டுத் தாபனங்களில் காணப்படும் அனுகூலங்கள்

- **அத்தியாவசியமான தேவைகளுக்குப் பொருத்தமானது.**

  பொது மக்களுக்குத் தேவையான பெரும்பாலான சேவைகளைத் தனியார் துறையினர் வழங்க முன்வராததால் அவற்றை நிறைவேற்றுவதற்கு அரச கூட்டுத்தாபன முறை பொருத்தமானதாகவுள்ளது.

  உதாரணம் :

  நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

  இலங்கை மின்சார சபை

- **தனியார் துறையின் ஏகபோக உரிமையைக் குறைப்பதற்கு உதவும்.**

  தனியார் துறையின் அதிகாரப் போக்கினூடாக ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்காக அரச கூட்டுத்தாபனங்களைப் பயன்படுத்தி போட்டித் தன்மையான சூழலை உருவாக்கிக் கொள்ள முடியும்.

  உதாரணம் :

  இலங்கைப் போக்குவரத்துச் சபை

- **இலாபம் பொதுமக்களைச் சென்றடைதல்**

  கூட்டுத்தாபனங்கள் மூலம் உழைக்கும் இலாபத்தின் ஒரு பங்கு அரச திரண்ட நிதியில் சேர்க்கப்படுகின்றது. பின்னர், இந்நிதிகள் பொதுமக்களின் சமூக நலத் திட்டங்களுக்கு அரசினால் பயன்படுத்தப்படுகின்றன.

### அரச கூட்டுத்தாபனங்களில் காணப்படும் பிரதிகூலங்கள்

- தீர்மானமெடுப்பதில் சுதந்திரத்தன்மை காணப்படாமை.
- அரச நிதிச்சட்ட விதி முறைகளிற்குட்பட்டது.

## அரச திணைக்களங்கள்

அமைச்சின் கீழ் முழுமையாக அரசின் நேரடி நிருவாகத்துக்குள்ளாகும் அமைப்பாக அரச திணைக்களங்களை இனங்காண முடியும். பெரும்பாலும் மக்களிற்குப் பல்வேறு சேவைகளை வழங்குவதற்காகத் திணைக்களமுறை செயற்படுத்தப்படுகின்றது.

உதாரணம் :

இலங்கை புகையிரதத் திணைக்களம்
இலங்கை தபால் திணைக்களம்

### அரச திணைக்களங்களின் பண்புகள்

அரச திணைக்கள அமைப்புக்களில் காணப்படும் முக்கிய பண்புகள் பின்வருமாறு :

- **உரிமையும் நிருவாகமும் அரசுக்கே உரியது**
  திணைக்களத்தின் முழு உரிமையும் அரசுக்கே உரியது. பாராளுமன்றத்தினதும் உரிய அமைச்சினதும் நேரடி நிருவாகத்துக்குக் கட்டுப்பட்டு இயங்குகின்றது. திணைக்களத்தின் தலைமை அதிகாரி மூலமாக முகாமைத்துவ, நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **சட்ட ரீதியான செயற்பாடுகளின்போது திணைக்களத்தின் வகைகூறல் அதிகாரி தனது பதவிப் பெயரில் பிரசன்னமாக வேண்டும்.**

- **தொடர்ந்தியங்கும் தன்மையிருத்தல்**
  அரச தீர்மானத்தின் அடிப்படையில் நிறுவனங்களின் நிலைப்புத்தன்மை தங்கியுள்ளது.

- **தேவையான மூலதனம் அரசால் வழங்கப்படுகின்றது.**
  அரசின் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### அரச திணைக்களங்களில் காணப்படும் அனுகூலங்கள்

- பொது மக்களுக்கு அவசியமான சேவைகளை வழங்குவதற்குப் பொருத்தமான அமைப்பொன்றாக அரச திணைக்களங்கள் காணப்படுகின்றன.

- பாரிய மூலதனம் தேவைப்படும் நீண்ட கால அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் திணைக்களங்கள் முன்வருதல்.

- அரச திணைக்களங்களில் பெருமளவான அரச ஊழியர்கள் பணிபுரியச் சந்தர்ப்பம் கிடைப்பதால் வேலைவாய்ப்புக்களை வழங்க முடிகின்றமை.

- பொது மக்களின் நலன்கருதி இலாபத்தை எதிர்பாராது சேவை வழங்கல்களைத் திணைக்களத்தினூடாக நிறைவேற்ற முடிகின்றமை.

*அரச திணைக்களங்களில் காணப்படும் பிரதிகூலங்கள்*

- பாராளுமன்றத்தினதும் உரிய அமைச்சரினதும் நிருவாகத்தின் கீழ் இயங்குவதால் தீர்மானமெடுப்பது காலதாமதமாகின்றது.
- அரச நிதிப்பிரமாணங்கள், நிருவாகப் பிரமாணங்கள், பல்வேறு சுற்று நிருபங்கள் போன்றவற்றிற்கேற்பத் திணைக்களச் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டி யிருப்பதால் தீர்மானமெடுப்பதில் சுயாதீனத் தன்மை காணப்படுவதில்லை.

## 3.2 பொருத்தமான வணிக அமைப்பு முறையொன்றைத் தெரிவு செய்தல்

மனிதனின் தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்வதற்கு ஒழுங்கமைக்கக் கூடிய பல்வேறு வகையிலான வணிக அமைப்புகளைப்பற்றி மேலே கலந்துரையாடப் பட்டுள்ளது. வணிகர்கள் இவ்வாறான வணிக அமைப்புகளைத் தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- நோக்க அடிப்படையில் வணிக அமைப்பைத் தெரிவு செய்தல்
- பருமன் அடிப்படையில் வணிக அமைப்பைத் தெரிவு செய்தல்
- முகாமைத்துவ நடைமுறையின் அடிப்படையில் வணிக அமைப்பைத் தெரிவு செய்தல்

## நோக்க அடிப்படையில் வணிக அமைப்பைத் தெரிவு செய்தல்

வணிக அமைப்பொன்றைத் தெரிவு செய்யும்போது பிரதானமாக இரு நோக்கங்கள் அடிப்படையாக கொள்ளப்படுகின்றன.

- இலாபம் உழைக்கும் நோக்கம்
- சமூக நல நோக்கம்

### இலாபம் உழைக்கும் நோக்கம்

அநேக வணிகர்கள் இலாபம் உழைக்கும் எதிர்பார்ப்புடன் வணிகக் கருமங்களை மேற்கொள்கின்றனர். இவ்வணிகர்கள் உச்ச இலாபத்தைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

மேற்கூறப்பட்ட வணிக அமைப்பு வகைக்குள் தனியாள் உரிமை வணிக அமைப்பு, பங்குடைமை வணிக அமைப்பு, கூட்டிணைக்கப்பட்ட கம்பனி அமைப்பு, அரச கம்பனிகள் ஆகியன உள்ளடக்கப்படுகின்றன.

### சமூக நல நோக்கம்

மனிதர்களின் தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்வதுடன் சமூக நலன்களையும் நோக்கமாகக் கொண்டு செயற்படும் வணிக அமைப்புகளும் காணப்படுகின்றன. இவ்வமைப்புக்கள் மூலம் அங்கத்தவர்களது நலன்கள் தொடர்பான செயற்பாட்டில் ஈடுபடுதல், அனர்த்தங்களுக்குட்பட்ட நபர்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

உதாரணம் :

- கமநலச் சேவை நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், மரண நலன்புரிச் சங்கங்கள்.
- கூட்டுறவுச் சங்கம்
- அரச திணைக்களங்கள்

மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்கு அமைவாக வணிகர்கள் தாம் எதிர்பார்க்கும் நோக்கங்களுக்குப் பொருத்தமான வணிக அமைப்பினைத் தெரிவுசெய்து கொள்ள வேண்டும்.

## பருமன் அடிப்படையில் வணிக அமைப்பைத் தெரிவுசெய்தல்

வணிக அமைப்பு வகையொன்றைத் தெரிவு செய்யும்போது வணிகர்கள் அதன் பருமன் பற்றியும் கவனத்திற் கொள்ளல் வேண்டும். பருமன் பற்றித் தீர்மானிக்கும் காரணிகள் சில உண்டு. பிரதானமாக உரிமையாளரின் நிதிவளம், திறன், அனுபவம், பல்வேறு இடைவினைத் தொடர்பு போன்றன முக்கியமாகும். அத்துடன் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், சேவைகளின் அளவு, உற்பத்திக்குரிய சந்தைப் பங்கு போன்ற காரணிகளும் வணிகத்தின் பருமனைத் தீர்மானிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

பருமனை அடிப்படையாகக் கொண்டு வணிக அமைப்புக்களை இரு வகையாக வகைப்படுத்த முடியும்.

- சிற்றளவிலான வணிகம்
- பேரளவு வணிகம் / பாரிய அளவிலான வணிகம்

### சிற்றளவு வணிகம்

வணிகர்கள் பெரும்பாலும் தொடக்கத்தில் ஆரம்பிப்பது சிற்றளவிலான வணிகமாகும். அவற்றுள் அநேகமான சிற்றளவு வணிகங்கள் தனியாள் உரிமை வணிகங்களாகக் காணப்படும். குறைந்த மூலதனம், குறைவான சட்டதிட்டங்கள், தமது திறமையை முழுமையாகப் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல் போன்ற காரணங்களினால் சிற்றளவு வணிகங்களை ஆரம்பிப்பது இலகுவானதாகும்.

### பேரளவு வணிகம்

வணிகர்களிடம் பாரியளவு மூலதன வளம் இருத்தல், ஏனைய வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனுபவம், வணிகத்தினை ஊக்குவிப்பதற்கு வழங்கப்படும் வலையமைப்புத் தொடர்புகள் காணப்படல், அரசினால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், வேறு ஊக்குவிப்பு வசதிகள் போன்ற காரணிகளால் பேரளவு வணிகங்கள் உருவாக்கப்பட முடியும்.

## முகாமைத்துவ நடைமுறையின் அடிப்படையில் வணிக அமைப்பைத் தெரிவுசெய்தல்.

வணிகரிடம் காணப்படும் வளங்களைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் என்பவற்றினூடாக வணிகத்தின் நோக்கத்தினை நிறைவேற்றவதற்குக் கருமமாற்றும் செயல்முறையே ''**முகாமைத்துவம்**'' என அழைக்கப்படும்.

தனியாள் உரிமை வணிகத்தில் உரிமையாளரால் முகாமைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனால், அவரது வணிகத்தின் சகல செயற்பாடுகள் தொடர்பாகவும் சுதந்திரமான தீர்மானம் மேற்கொள்ள அவரால் முடிகின்றது. அவர் அவ்வணிகத்தின் உரிமையாளராகவும் அதே நேரத்தில் முகாமையாளராகவும் செயற்பட முடிகின்றது.

இங்கு உரிமையாளர் என்ற வகையில் நிதியைச் சேகரித்தல், முதலீடு செய்தல் தொடர்பான தீர்மானம் எடுப்பதற்கு சுதந்திரம் உண்டு. அவ்வாறே ''தலைவர்'' என்ற வகையில் வளங்களை ஒழுங்கமைத்தல் தொடர்பாகச் சுயாதீனமாகத் தீர்மானம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். முகாமையாளர் என்ற வகையில் வணிகத்தின் நோக்கத்தைத் தீர்மானித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகச் சகல திட்டங்களையும் வகுத்தல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், நிருவாகம் செய்தல் போன்றன தனிநபரின் விருப்பத்துக்கு அமைய மேற்கொள்ள முடியும்.

வணிகமொன்றில் முகாமைத்துவச் செயற்பாடுகள் நபர்கள் பலபேருக்கிடையில் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாயின் பங்குடைமை வணிக அமைப்பை அல்லது கூட்டிணைக்கப்பட்ட கம்பனியினைத் தெரிவுசெய்தல் வேண்டும். இதனால் பங்காளர் அனைவரினதும் அல்லது பங்குதாரர்களின் விருப்பத்துக்கமைய வணிகம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

## 3.3 தனியாள் உரிமை வணிகமொன்றைப் பதிவு செய்தல்

தனியாள் உரிமை வணிகமொன்றினது பெயர் அதன் உரிமையாளரின் பெயரை முழுமையாகக் கொண்டிராது வேறு பெயரில் காணப்படுமாயின் அதனைக் கட்டாயமகப் பதிவு செய்தல் வேண்டும்.

உதாரணம்

ஜானகிராமன் என்பவர் தனது வணிகத்தை ஜானகி எனும் பெயரில் நடாத்திச் செல்வா ராயின் வணிகத்தின் பெயரைப் பதிவு செய்தல் வேண்டும். இங்கு வணிகத்தின் பெயரைப் பதிவு செய்தல் மட்டுமே இடம்பெறுகின்றது. இதன் மூலம் வணிகத்திற்குச் சட்டரீதியான தனிமனித அந்தஸ்துக் கிடைக்காது.

### தனியாள் உரிமை வணிகமொன்றைப் பதிவு செய்வதற்குரிய சட்ட ரீதியான வழிமுறைகள்

தனியாள் உரிமை வணிகமொன்றினை உரிமையாளரின் முழுமையான பெயரிலன்றி வேறு பெயரொன்றின் மூலம் நடாத்திச் செல்வதாயின் 1918ம் ஆண்டு 6ஆம் இலக்க வணிகப் பெயர் பதிவுக் கட்டளைச் சட்டத்திற்கமைய உரிய மாகாண சபை வணிகப் பெயர் பிரமாணத்தின் அடிப்படையில் வணிகப் பெயரினைப் பதிவு செய்தல் வேண்டும். இதற்கமைய வணிகப் பெயரைப் பதிவு செய்யும் அதிகாரியாக இருப்பவர் உரிய மாகாண சபையின் வணிகப் பெயர் பதிவாளராக இருப்பார். பதிவு செய்வதற்கு தேவையான விண்ணப்பப் படிவத்தைப் பிரதேச செயலாளர் காரியாலயங்களில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். பதிவு செய்வதற்குரிய கட்டணங்கள் அந்தந்த மாகாண சபைகளிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமையத் தீர்மானிக்கப்படும். தனியாள் உரிமை வணிகமொன்றினை ஆரம்பித்து 14 நாட்களிற்குள் வணிகப் பெயரைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தனியாள் உரிமை வணிகமொன்றினைப் பதிவு செய்வதற்குப் பின்வரும் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

01. தனியாள் உரிமை வணிகத்தை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் பிரதேச செயலாளர் காரியாலயத்திலிருந்து உரிய விண்ணப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளல், இதற்காகப் பின்வரும் இரு வகையான படிவங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

    i தனியாள் உரிமை வணிகப் பெயரைப் பதிவதற்கான விண்ணப்படிவம்.

    ii வணிகப் பெயரைப் பதிவு செய்வதற்குத் தேவையான கிராம உத்தியோகத்தரின் அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்.

02. கிராம உத்தியோகத்தரால் சான்றுபடுத்திய அறிக்கையையும் சரியாகப் பூரணப் படுத்திய விண்ணப்பப்படிவத்தினையும் பதிவு செய்வதற்குரிய கட்டணத்துடன் பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

03. பிரதேச செயலாளரால் மேற்கூறப்பட்ட ஆவணங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர் வணிகப் பெயரினைப் பதிவு செய்வதற்குரிய சான்றிதழ் வழங்கப்படும். இச்சான் றிதழை வணிக நிலையத்தில் அனைவரும் பார்வையிடக் கூடியவாறு காட்சிப் படுத்துதல் வேண்டும்.

## வணிகமொன்றைப் பதிவு செய்வதனால் பெறக்கூடிய அனுகூலங்கள்

தனியாள் உரிமை வணிகமொன்றின் பெயரைப் பதிவு செய்வதனூடாகப் பின்வரும் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- ***அடையாளமொன்று கிடைத்தல்***

  குறித்த வணிகமானது ஏனைய வணிகங்களிலிருந்து வேறுபடுத்தி இனங் காணக்கூடியதாக உள்ளது.

- ***வணிகத்தின் பெயரின் உரிமையினை உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல்***

  இங்கு உரிமையாளரின் பெயரில் வணிகத்தைப் பதிவு செய்வதனால் வணிகத்தினது பெயரின் உரிமையை உறுதிப்படுத்தக் கூடியதாயிருத்தல்.

- ***அரசினால் வழங்கப்படும் ஊக்குவிப்புகளை பெற்றுக் கொள்வதற்கான தகைமை கிடைத்தல்.***

  அரசினால் வணிகங்களுக்குப் பல்வேறு வசதிகள், சலுகைகள் வழங்கப் படுகின்றன. அச்சலுகைகளைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் பதிவு செய்யப்பட்ட வணிகங்களிற்குக் கூடுதலாகக் கிடைக்கும்.

- ***கடனை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.***

  பெயரினை பதிவு செய்யும் வணிகங்கள் தொடர்பாக நம்பகத்தன்மை ஏற்படுவதால் கடன் வழங்குனர்கள் கடனை வழங்குவதற்குத் தூண்டப்படுவர்.

## செயற்பாடு 01

உங்களது பிரதேசத்தில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கக் கூடிய தனியாள் உரிமை வணிகமொன்று தொடர்பாகக் கவனஞ் செலுத்தவும்.

01. அவ்வணிகத்திற்குப் பொருத்தமான பெயரொன்றை முன் மொழியவும்.
02. அவ்வாறான தனியாள் உரிமை வணிகமொன்றை ஆரம்பிப்பதன் மூலம் பெறக்கூடிய அனுகூலங்களை விளக்கவும்.
03. அவ்வாறான தனியார் உரிமை வணிகமொன்றை ஆரம்பிப்பதனால் ஏற்படும் பிரதிகூலங்களிற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுமா? உங்களது விடைக் கான காரணங்களைக் குறிப்பிடுக.
04. அவ்வணிகத்தின் பெயரினைப் பதிவு செய்ய வேண்டுமா? காரணத்தைக் குறிப்பிடவும்.
05. வணிகத்தின் பெயரில் பதிவு செய்தல் கட்டாயமானதாக இருப்பின் அதற் காகப் பின்பற்ற வேண்டிய விதிமுறையினைத் தெளிவுப்படுத்தவும்.

## செயற்பாடு 02

தலைப்புக்கள் அடிப்படையில் வணிக வகைகளுக்கிடையில் காணப்படும் ஒற்றுமை / வேற்றுமைகளைக் காட்டும் அட்டவணையினைப் பூர்த்திசெய்க.

| தலைப்புக்கள் | தனியாள் வணிகம் | பங்குடைமை வணிகம் | கூட்டிணைக்கப் பட்ட கம்பனி | கூட்டு றவு | அரச கூட்டுத் தாபனம் | அரச திணைக்களம் |
|---|---|---|---|---|---|---|
| உரிமை | | | | | | |
| மூலதனம் திரட்டுதல் | | | | | | |
| பொறுப்பு | | | | | | |
| முகாமைத்துவம் | | | | | | |
| தனி மனித அந்தஸ்து | | | | | | |
| நிலைப்புத் தன்மை | | | | | | |

## செயற்பாடு 03

சில வணிக நிறுவனங்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட பிரியா கம்பனி
- ஆனந்தா ஸ்டோர்ஸ்
- சில்வாவும் சகோதரர்களும்
- இளைஞர் நற்பணிச் சங்கம்
- இலங்கை புகையிரதத் திணைக்களம்
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்
- இலங்கை மின்சார சபை

01. மேற்காட்டிய ஒவ்வொரு நிறுவனத்திற்குரிய வணிக அமைப்பு வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

02. அவ்வணிக நிறுவனங்களை உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

03. வணிகங்களை நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தி மேற்காட்டிய வணிகங்களை அவ்வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்துக.

04. மேற்காட்டிய வணிக நிறுவனங்களின் சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்துடன் கூடிய வணிக நிறுவனங்கள் எவையெனக் கூறுக.

05. இவ்வணிக நிறுவனங்கள் மூலதனத்தினைப் பெற்றுக் கொள்ளும் முறையினைத் தனித்தனியாகச் சுட்டிக் காட்டுக.

## செயற்பாடு 04

சரவணன் அனைவரது கருத்துக்களிற்கும் செவிசாய்க்கின்றார். சுமுகமான தீர்மானம் எடுப்பதைப்போன்று இடர்களைப் பகிர்ந்துக் கொள்வதிலும் அவர் விருப்பமுடையவராக இருக்கின்றார். குழுவாக கடமையாற்றுவதிலும் ஒருமைப்பாட்டுடன் பணியாற்றுவதிலும் நம்பிக்கை கொண்ட அவர் பரஸ்பர புரிந்துணர்வுடன் ஏனையோரிடமும் செயலாற்றுவதற்குரிய இயலுமையைக் கொண்டுள்ளார். அவரது நண்பரொருவரின் பொறுப்பொன்றைக் பொறுப்பேற்க கூடியவாறாகவுள்ளார்.

காதர் தனித் தீர்மானம் எடுப்பதில் விருப்பம் கொண்ட நபராவார். அவருக்கு எந்தவொரு இடரையும் தனித்துப் பொறுப்பேற்பதற்குச் சக்தியுடையவராக இருக்கின்றார். எவ்வேளையிலும் அவர் தனது கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதில் அதிக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்.

சரவணன், காதர் ஆகியோர் வணிகத்தினை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்புடைய வர்களாக இருக்கின்றனர்.

01. மேற்காட்டிய விடயங்களிற்கமைவாக சரவணன் எவ்வாறான வணிக அமைப்பு முறையினை ஆரம்பிக்க வேண்டும் என்பதனை முன்மொழியவும். உங்களது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடவும்.

02. காதரினால் ஆரம்பிக்க வேண்டிய வணிக வகை எது என்பதனை முன் மொழியவும். உங்களது விடைக்கான காரணங்களைக் காட்டவும்.

03. சரவணன், காதர் என்போர் அவ்வகையான வணிக அமைப்பு வகைகளை ஆரம் பிப்பதன் மூலம் அவர்களுக்குக் கிடைக்கின்ற அனுகூலங்கள், பிரதிகூலங்களை வெவ்வேறாக எழுதிக் காட்டவும்.